# விலைக்கேள்விக்கான கோரல்(2023/01)
## நன்னடத்தை பாதுகாவல் மற்றும் சிறுவர் கவனிப்பு சேவைகள் திணைக்களம்,வடமாகாணம்
## பொருள் விற்பனை, (தோண்டப்பட்ட சுண்ணாம்பு இடிபாடு)

1. மாகாண ஆணையாளர், நன்னடத்தை பாதுகாவல் மற்றும் சிறுவர் கவனிப்பு சேவைகள் திணைக்களம், சார்பாக திணைக்களப் பெறுகைக்குழுவின் தவிசாளர் கீழ் வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட வேலைக்கான தகவுடையோரும் தகைமை பெற்றவருமான விலைக்கேள்வியாளர்களிடமிருந்து மூடப்பட்ட கடித உறையில் விலைக்கேள்விகளைக் கோருகின்றார்கள்.
2. அக்கறை கொண்டுள்ள விலைக்கேள்வியாளர்கள் கீழே **3ல் குறிப்பிடப்பட்ட முகவரியில்** மேலதிக தகவலைப் பெறலாம் என்பதுடன் ,அம் முகவரியில் மு.ப **9.00** மணியிலிருந்து பி.ப **3.00** மணிவரை அலுவலக நாட்களில் விலைக்கேள்வி ஆவணங்களைப் பரிசீலனை செய்யலாம். ஆகழப்பட்ட கற்களை ஆயுள்வேத வைத்தியசாலை அச்சுவேலி வளாகத்தில் காலை மு.ப 11 முதல் மாலை பி.ப 2 மணிவரை அதிபர் சான்றுபெற்ற பாடசாலை அச்சுவேலி **(தொலைபேசி இல. 0213218494)** அவர்களின் அனுமதி பெற்று பார்வையிடலாம்.
3. அக்கறை கொண்டுள்ள விலைக்கேள்வியாளர் ஆங்கில மொழியிலான விலைக்கேள்வி ஆவணங்களின் பூரணமான தொகுதியொன்றை**, மாகாண ஆணையாளர், நன்னடத்தை பாதுகாவல் மற்றும் சிறுவர் கவனிப்பு சேவைகள் திணைக்களம்,, வடக்குமாகாணம் மீனாட்சி அம்மன் வீதி, பண்ணை யாழ்ப்பாணம். (தொலைபேசி இல: 021-2057102, தொலைநகல் 021-2057103) எனும் முகவரியில் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றை கீழே அட்டவணையில் காட்டப்பட்ட காலப்பகுதியில் மு.ப 9.00 மணியிலிருந்து பி.ப 3.00 மணிவரையில் சமர்ப்பித்து** கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறான மீளளிக்கப்படாத தொகையினை பணமாகச் செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.
4. விலைக்கேள்விகள் (மூலம்,பிரதி) கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்ட திகதி **மு.ப 10.30** மணிக்கு அல்லது அதற்கு முன்னர் **தவிசாளர், திணைக்களப்பெறுகைக்குழு, நன்னடத்தை பாதுகாவல் மற்றும் சிறுவர் கவனிப்பு சேவைகள் திணைக்களம்,வடக்குமாகாணம் மீனாட்சி அம்மன் வீதி பண்ணை யாழ்ப்பாணம் எனும் முகவரியில் நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ ஒப்படைத்தல் வேண்டும்**. காலந்தாழ்த்தப்பட்ட விலைக்கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விதாரர்கள் வேலைக்கான கேள்வி அடையாள இலக்கத்தினை தபாலுறையின் இடது மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும். விலைக்கேள்விகள், அவைகளை மூடியவுடன் மேலேயுள்ள முகவரியில் சமூகமளித்திருக்கும் விலைக்கேள்வியாளர்களின் பிரதிநிதிகளது முன்னிலையில் திறக்கப்படும்.
5. விலைக்கேள்விக்கு முன்னரான கூட்டம் மேலே 3ல் குறிப்பிடப்பட்ட முகவரியில் **மு.ப 10.30** மணிக்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்ட திகதியில் நடைபெறும்
6. கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டவாறான கேள்விப் பிணைப்பொறுப்பு இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

| | | | | |
|---|---|---|---|---|
| | கேள்விஆவணம் வழங்கும்/பெற்றுக்கொள்ளும் காலம் | | **2023-05.24** முதல் **2023-06.06** வரை | |
| | விலைக்கேள்விக்குமுன்னரான கூட்டம் | | **2023.05.31** அன்று பி.ப **2.00** | |
| | கேள்வி மூடுதல்/திறத்தல் | | **2023-06.07** அன்று மு.ப **10.30** | |
| கேள்விஅடையாள இல | விற்பனை விபரம் | மீளளிக்கப் படாததொகை (ரூ) | கேள்விப் பிணைவிபரம் | |
| | | | தொகை (ரூ) | தேவைப்படும் காலம். |
| SALE/NP/PB/JA/01/2023 | ஏலவே அகழப்பட்டு கணிய அளவீடு செய்யப்பட்டு குவிக்கப்பட்டுள்ள (ஏறத்தாள 200 கியூப்) சுண்ணக்கற்களை வாகனத்தில் ஏற்றி தளத்திலிருந்து அகற்றி அப்புறப்படுத்தல். | 3000.00 | 50000.00 | 2023.08.23 வரை |
| SALE/NP/PB/JA/02/2023 | ஏலவே அகழப்பட்டு கணிய அளவீடு செய்யப்படாமல் எழுந்த மாறாக குவிக்கப்பட்ட சுண்ணக்கற்களை வாகனத்தில் ஏற்றி தளத்திலிருந்து அகற்றி அப்புறப்படுத்தல். | 3000.00 | 25000.00 | 2023.08.23 வரை |

தவிசாளர்,
திணைக்களப்பெறுகைக்குழு,
நன்னடத்தை பாதுகாவல் மற்றும் சிறுவர் கவனிப்பு சேவைகள் திணைக்களம்
வடக்குமாகாணம்
மீனாட்சி அம்மன் வீதி
பண்ணை, யாழ்ப்பாணம்